# MARKING SCHEME

**Strictly Confidential (For Internal and Restricted use only)**

**Senior Secondary School Certificate Examination, 2024 – 2025 [ SSCE]**

**SUBJECT NAME : TAMIL (106) Q.P.CODE : 6 SET : 4**

**GENERAL INSTRUCTIONS**

| | |
|---|---|
| 1 | You are aware that evaluation is the most important process in the actual and correct assessment of the candidates. A small mistake in evaluation may lead to serious problems which may affect the future of the candidates, education system and teaching profession. To avoid mistakes, it is requested that before starting evaluation, you must read and understand the spot evaluation guidelines carefully. |
| 2 | **"Evaluation policy is a confidential policy as it is related to the confidentiality of the examinations conducted, Evaluation done and several other aspects. Its' leakage to public in any manner could lead to derailment of the examination system and affect the life and future of millions of candidates. Sharing this policy/document to anyone, publishing in any magazine and printing in News Paper/Website etc. may invite action under various rules of the Board and IPC."** |
| 3 | Evaluation is to be done as per instructions provided in the Marking Scheme. It should not be done according to one's own interpretation or any other consideration. Marking Scheme should be strictly adhered to and religiously followed. **However, while evaluating, answers which are based on latest information or knowledge and/or are innovative, they may be assessed for their correctness otherwise and due marks be awarded to them. In class-XII, while evaluating two competency-based questions, please try to understand given answer and even if reply is not from marking scheme but correct competency is enumerated by the candidate, due marks should be awarded.** |
| 4 | The Marking scheme carries only suggested value points for the answers These are in the nature of Guidelines only and do not constitute the complete answer. The students can have their own expression and if the expression is correct, the due marks should be awarded accordingly. |
| 5 | The Head-Examiner must go through the first five answer books evaluated by each evaluator on the first day, to ensure that evaluation has been carried out as per the instructions given in the Marking Scheme. If there is any variation, the same should be zero after delibration and discussion. The remaining answer books meant for evaluation shall be given only after ensuring that there is no significant variation in the marking of individual evaluators. |

| | |
|---|---|
| 6 | Evaluators will mark ( ✔ ) wherever answer is correct. For wrong answer CROSS 'X" be marked. Evaluators will not put right ( ✔ ) while evaluating which gives an impression that answer is correct and no marks are awarded. **This is most common mistake which evaluators are committing.** |
| 7 | If a question has parts, please award marks on the right-hand side for each part. Marks awarded for different parts of the question should then be totaled up and written in the left-hand margin and encircled. This may be followed strictly. |
| 8 | If a question does not have any parts, marks must be awarded in the left-hand margin and encircled. This may also be followed strictly. |
| 9 | If a student has attempted an extra question, answer of the question deserving more marks should be retained and the other answer scored out with a note **"Extra Question"** |
| 10 | No marks to be deducted for the cumulative effect of an error. It should be penalized only once. |
| 11 | A full scale of marks ----- (example 0 to 80/70/60/50/40/30 marks as given in Question Paper) has to be used. Please do not hesitate to award full marks if the answer deserves it. |
| 12 | Every examiner has to necessarily do evaluation work for full working hours i.e., 8 hours every day and evaluate 20 answer books per day in main subjects and 25 answer books per day in other subjects (Details are given in Spot Guidelines). This is in view of the reduced syllabus and number of questions in question paper. |
| 13 | **Ensure that you do not make the following common types of errors committed by the Examiner in the past:-**<br>• Leaving answer or part thereof unassessed in an answer book.<br>• Giving more marks for an answer than assigned to it.<br>• Wrong totaling of marks awarded on an answer.<br>• Wrong transfer of marks from the inside pages of the answer book to the title page.<br>• Wrong question wise totaling on the title page.<br>• Wrong totaling of marks of the two columns on the title page.<br>• Wrong grand total.<br>• Marks in words and figures not tallying/not same.<br>• Wrong transfer of marks from the answer book to online award list.<br>• Answers marked as correct, but marks not awarded. (Ensure that the right tick mark is correctly and clearly indicated. It should merely be a line. Same is with the X for incorrect answer.) |

| | |
|---|---|
| | • Half or a part of answer marked correct and the rest as wrong, but no marks awarded. |
| 14 | While evaluating the answer books if the answer is found to be totally incorrect, it should be marked as cross (X) and awarded zero (0)Marks. |
| 15 | Any unassessed portion, non-carrying over of marks to the title page, or totaling error detected by the candidate shall damage the prestige of all the personnel engaged in the evaluation work as also of the Board. Hence, in order to uphold the prestige of all concerned, it is again reiterated that the instructions be followed meticulously and judiciously. |
| 16 | The Examiners should acquaint themselves with the guidelines given in the **"Guidelines for spot Evaluation"** before starting the actual evaluation. |
| 17 | Every Examiner shall also ensure that all the answers are evaluated, marks carried over to the title page, correctly totaled and written in figures and words. |
| 18 | The candidates are entitled to obtain photocopy of the Answer Book on request on payment of the prescribed processing fee. All Examiners/Additional Head Examiners/Head Examiners are once again reminded that they must ensure that evaluation is carried out strictly as per value points for each answer as given in the Marking Scheme. |

| | | |
|---|---|---|
| | **மத்திய இடைநிலைக் கல்விக் கழகம்** | |
| | **விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி - 2025** | |
| | **வகுப்பு : 12** **பாடம் : தமிழ் [ 106 ]**<br>**மொத்த மதிப்பெண்கள் : 80** | |
| | ➢ இருபத்து ஏழு (27) மதிப்பெண்களுக்குக் கீழ் பெறக்கூடிய விடைத்தாள்கள் தலைமைத் தேர்வாளரின் ஒப்புதலுக்குப் பிறகே பதிவு செய்ய வேண்டும். | |
| | ➢ மதிப்பெண்கள் விடைத்தாளின் வலப்பக்கத்திலும், மொத்தமதிப்பெண்கள் விடைத்தாளின் இடப்பக்கத்திலும் வட்டத்திற்குள் தெளிவாக எழுதுதல் வேண்டும். விடைகள் சரியாக எழுதியிருப்பின்( ✔ ) என்றும் விடை தவறு எனின் (X) என்றும் குறியிட வேண்டும். தவறு எனின் ZERO என்று வலப்பக்கத்தில் எழுத்தில் எழுத வேண்டும். விடை எழுதாமல் வினா மட்டும் எழுதியிருப்பின் ( - ) இட வேண்டும். | |
| | ➢ விடைத்தாளில் எழுதாத பக்கங்களை அடிக்க வேண்டும், விடைத்தாளின் முதல் மற்றும் இறுதிப் பக்கத்தில் தேர்வாளரின் கையொப்பம், தேர்வாளர் எண், மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். | |

| | | |
|---|---|---|
| | ➢ மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்களை எழுதி வட்டமிடுதல் வேண்டும்.<br>➢ மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்களை ஆங்கிலத்தில் எழுத வேண்டும். | |
| | ➢ தேர்வுத்தாள் உரிய தேர்வாளரால் திருத்தப்பட்ட பின் மற்றொரு தேர்வாளர் அவ்விடைத்தாளின் மதிப்பெண்களின் கூட்டுத் தொகை மற்றும் எழுதப்பட்ட சரியான விடைகளுக்கு மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்துத் தங்கள் தேர்வாளர் எண், கையொப்பம் ஆகியவற்றை இட வேண்டும். திருத்தங்கள் இருப்பின் உரிய தேர்வாளரிடம் கொடுத்துத் திருத்தங்கள் செய்ய வேண்டும். | |
| | ➢ புள்ளி விவரங்களுக்காக ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்யும் விடைத்தாள்களின் மதிப்பெண்களை மட்டும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும் | |
| 1 - 2 | ➢ வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள முதல் இரண்டு பத்தி வினா விடைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | 10x 1 = 10 |
| 3 - 6 | ➢ இலக்கண விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். இலக்கண விடைகள் 5 எழுதியிருப்பின் சரியான 3 விடைகளைத் தேர்ந்தெடுத்து மதிப்பெண் வழங்கலாம். | 12 x 1 = 12 |

| | | |
|---|---|---|
| | ➢ வழுவற்ற தொடரைத் தெரிவு செய்து எழுதுக பகுதியில் கொடுக்கப்பட்ட இரண்டாவது வினாவில் அமலன் எனும் சொல் உயர்திணை ஆண் பால் என்பதால் **அமலன் ஓவியக்கலையில் தேர்ச்சி பெற்றான்** என்பதே சரியான விடை. அமலன் உயர்திணை சிறப்புப்பெயராகக் கருதும் போது **அமலன் ஓவியக்கலையில் தேர்ச்சி பெற்றார்** என்றும், **அமலன் ஓவியக்கலையில் தேர்ச்சி பெற்றவர்** என்றும் எழுதி இருந்தாலும் மதிப்பெண் வழங்கலாம்.<br><br>➢ அதே போன்று இதே பகுதியில் வினா எண் மூன்றில் **வாகனத்தை இடப்பக்கம் திருப்பாதே** என்பது சரியான விடையாகும். **வாகனத்தை இடது புறம் திருப்பாதே** என்று எழுதி இருந்தாலும் மதிப்பெண் வழங்கலாம்.<br><br>➢ **ஒன்றோ இரண்டோ பெறுக** என்பதே சரியான விடையாகும். இலக்கண விதிப்படி **ஒன்றோ அல்லது இரண்டோ பெறுக** என்று எழுதி இருந்தாலும் மதிப்பெண் வழங்கலாம். | |
| 7 | ➢ செய்யுள் பாடலடி வினா விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | 5 x 1 = 5 |
| 8 | ➢ உரைநடைப் பத்தி வினா விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | 5 x 1 = 5 |
| 9 | ➢ செய்யுள் பகுதியில் சரியான விடைகள் பிழையற இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | 2 x 3 = 6 |

| | | |
|---|---|---|
| | ➢ மூன்று மதிப்பெண்களுக்குக் குறைந்தபட்சம் இரண்டு மதிப்பெண்கள் வழங்கலாம். | |
| 10 | ➢ உரைநடை விடைகள் பிழையற இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். 5 மதிப்பெண்களுக்குக் குறைந்தபட்சம் 3 மதிப்பெண்கள் வழங்கலாம். | 3 x 5 = 15 |
| 11 | ➢ துணைப்பாடக் கட்டுரை கதை அமைப்பு மாறாமலும், சிறந்த நடையுடனும், வடிவமைப்பு முறையிலும் இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.<br>➢ துணைப்பாடக் கட்டுரை முன்னுரை , முடிவுரை, பக்கத் தலைப்புகளின்றிச் சுருக்கமாகப் பத்தி வடிவில் எழுதியிருப்பின் 5/7 மதிப்பெண்களும், கட்டுரை வடிவில் பிழைகளின்றி எழுதியிருப்பின் 7/7 மதிப்பெண்களும் பிழைகள் இருப்பின் குறைந்த பட்சம் 5/7 மதிப்பெண்களும், வழங்கலாம்.<br>➢ அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை வலப்பக்கம் இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி அதனை வட்டமிட வேண்டும். | 1 x 7 = 7 |
| 12 | ➢ துணைப்பாடக் கதைமாந்தரின் பண்புநலனைச் சிறந்த நடையுடனும், வடிவமைப்பு முறையிலும் எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். பத்தி வடிவில் எழுதியிருப்பின் 3/5 மதிப்பெண்களும்\, வடிவமைப்பு முறையில் இருந்து பிழைகள் இருப்பின் | 1 x 5 = 5 |

| | | |
|---|---|---|
| | குறைந்த பட்சம் 3/5 மதிப்பெண்களும் வழங்கலாம். அவ்வப்பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை வலப்பக்கம் இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி அதனை வட்டமிட வேண்டும். | |
| 13 | ➢ கடிதம் உரிய வடிவமைப்பு முறையில் எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | 1 x 6 = 6 |
| 14 | ➢ நேர்காணல் உரிய வடிவமைப்பு முறையில் எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | 1 x 3 = 3 |
| 15 | ➢ கட்டுரை போதிய துணைத்தலைப்புகளுடன் இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். பக்கத் தலைப்புகள் இன்றிச் சுருக்கமாகப் பத்தி வடிவில் எழுதியிருப்பின் 4/6 மதிப்பெண்கள் வழங்கலாம். | 1 x 6 = 6 |
| | ➢ கடிதம், நேர்காணல் , கட்டுரை ஆகியவற்றில் ஒட்டுமொத்தமாக மதிப்பெண்கள் வழங்காமல் அவ்வப்பகுதிகளுக்குத் தனித்தனியாக மதிப்பெண்கள் வலப்பக்கம் வழங்கியபின் இறுதியாக இடப்பக்கம் வட்டத்திற்குள் மொத்த மதிப்பெண்கள் வழங்கி வட்டமிட வேண்டும். | |
| | ➢ **தகுதியான பிழைகளற்ற விடைத்தாளுக்கு மட்டுமே அதிகபட்ச மதிப்பெண் 80/80 வழங்க வேண்டும்.** | |

# MARKING SCHEME FOR BOARD EXAM - 2024 - 25

## ( CLASS XII - TAMIL -106 )

## மதிப்பெண் வழங்கும் முறை

**வகுப்பு : 12** **தமிழ் - 106**

**மொத்த மதிப்பெண்கள் : 80**

| | | | | |
|---|---|---|---|---|
| | | **பகுதி - அ ( படித்தல் - 10 மதிப்பெண்கள் )** | | |
| | | **SECTION – A ( UNSEEN PASSAGE - 10 MARKS )** | | |
| **1** | | **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடை தருக:** | | **5× 1 =5** |
| | **I** | C. மயிலை சீனி வேங்கடசாமி | 1 | |
| | **II** | D. களப்பிரர் காலம் | 1 | |
| | **III** | B. மயிலை சீனி வேங்கடசாமி | 1 | |
| | **IV** | D. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1 | |
| | **V** | C. செந்தமிழ்ச்செல்வி | 1 | |
| **2** | | **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக:** | | **5× 1 =5** |
| | **I** | உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளி உண்டாகும் | 1 | |
| | **II** | கவிதை இது அல்ல, அது அல்ல, என எளிதில் கூறிவிடலாம். ஆனால் இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல. | 1 | |
| | **III** | சொற்களை சிறந்த முறையில் வைப்பது தான் வசனம். | 1 | |
| | **IV** | கவிதையின் தலையாய நோக்கம் இன்பம் விளைவிப்பதே. | 1 | |
| | **V** | ஓடுகின்ற நன்னீர் தெளிவாய் இருப்பது போல கவிதையும் தெளிவாய் இருத்தல் வேண்டும். | 1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **பகுதி -ஆ ( இலக்கணம் - 12 மதிப்பெண்கள் )** | | |
| | | **SECTION – B ( GRAMMAR - 12 MARKS )** | | |
| **3** | | **பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக: ( மூன்று மட்டும் )** | | **3× 1 =3** |
| | **I** | D. காற்று மாசுபாடு குறித்துக் கலந்துரையாடி விழிப்புணர்வு பெறுதல் | 1 | |
| | **II** | A. இயற்கையைப் பற்றி விவரித்தும் வருணித்தும் எழுதுக. | 1 | |
| | **III** | D. நீரின்றி அமையாது உலகு | 1 | |
| | **IV** | C. யாழ் இசை கேட்டு இன்புற்றான் | 1 | |
| | **V** | D. விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? | 1 | |
| **4** | | **வல்லின மெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக: (மூன்று மட்டும்)** | | **3× 1 =3** |
| | **I** | B. அந்தக் கதவின் பூட்டுச் சாவியைக் கொடு | 1 | |
| | **II** | நான்கும்<br>**[ விடைகள் நான்கும் தவறாக இருப்பதால் எது எழுதி இருந்தாலும் மதிப்பெண் வழங்குக. ]** | 1 | |
| | **III** | A. அங்குச் செல்லும் பையன் எதனைத்தேடி அங்குச் செல்கிறான். | 1 | |
| | **IV** | D. பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் சங்ககால இலக்கியங்கள் | 1 | |
| | **V** | B. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | 1 | |
| **5** | | **எடுத்துக்காட்டு எழுதுக: ( மூன்று மட்டும் )** | | **3× 1 =3** |
| | **I** | **தன்வினை** - C. மலர்விழி படித்தாள் | 1 | |
| | **II** | **செயப்பாட்டு வினை** - B. கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது | 1 | |
| | **III** | **கலவை வாக்கியம்** - C. மோகன் போட்டியில் பங்குபெற்று வெற்றி பெற்றான் | 1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | IV | **நேர்க்கூற்று** - A. " நான் நாளை கல்லூரிக்குச் செல்ல உள்ளேன்" என்று கண்ணன் தன் தங்கையிடம் கூறினான். | 1 | |
| | V | **உடன்பாட்டு வினை** - B. நான் பாடம் படித்தேன் | 1 | |
| **6** | | **வழுவற்ற தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக: ( மூன்று மட்டும் )** | | **3× 1 =3** |
| | **I** | A. இங்குள்ளவையெல்லாம் நல்ல நூற்களே | 1 | |
| | **II** | C. அமலன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றான்.<br>A. அமலன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றார்.<br>D. அமலன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றவர். | 1 | |
| | **III** | A. வாகனத்தை இடப்பக்கம் திருப்பாதே<br>B. வாகனத்தை இடதுபுறம் திருப்பாதே | 1 | |
| | **IV** | D. அந்த மாந்தோப்பில் தான் எப்போதும் விளையாடுவேன் | 1 | |
| | **V** | B. ஒன்றோ இரண்டோ பெறுக.<br>A. ஒன்றோ அல்லது இரண்டோ பெறுக | 1 | |
| | | **பகுதி - இ (இலக்கியம் - 31 மதிப்பெண்கள் )** | | |
| | | **SECTION – C ( MAIN COURSE BOOK - 31 MARKS )** | | |
| **7** | | **பின்வரும் செய்யுளைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடை தருக:** | | **5× 1 =5** |
| | **I** | A. அகநானூறு | 1 | |
| | **II** | B. அம்மூவனார் | 1 | |
| | **III** | D. நெய்தல் | 1 | |
| | **IV** | C. நெல் | 1 | |
| | **V** | A. ஒளிபொருந்திய வளையல் | 1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | | **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக:** | | **5× 1 =5** |
| | **I** | இயற்கையானது சமநிலையோடு இருந்தால் தான் அந்தந்தப் பருவநிலைக்கேற்ற நிகழ்வுகள் இயல்பாக நடக்கும் | 1 | |
| | **II** | இயல்பான பருவநிலை மாற்றத்தால் புயல், பெருமழை, பெருவெள்ளம், புவிவெப்பமாதல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. | 1 | |
| | **III** | நிஷா, தானே, வர்தா, ஒக்கி, கஜா | 1 | |
| | **IV** | " மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் ", " நீரின்றி அமையாது உலகு " . | 1 | |
| | **V** | புவிவெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார். | 1 | |
| 9 | | **பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடையளிக்க:** | | **2× 3 =6** |
| | **I** | **நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் குளிர்காலக் கொடுமை:**<br>• மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது இவ்வுலகு குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது.<br>• தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை<br><br>வெறுத்த வளைந்த கோலையுடைய ஆயர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய கூட்டங்களை மற்றொரு மேடான நிலங்களில் மேய விட்டனர்.<br>• தாம் பழகிய நிலத்தை விட்டு நீங்கியதால் வருத்தம் அடைந்தனர்.<br>• அவர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது.<br>• பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதும் அவர்களது பற்கள் நடுங்கின. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன<br>• குரங்குகள் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.<br>• மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு, | | |
| | II | **இடம்** : கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், குகப்படலம்<br>**விளக்கம்** :<br>• இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே என்று குகன் வருந்தினான்.<br>• அதை உணர்ந்த இராமன், ' குகனே! துன்பம் என்று ஒன்று இருந்தால்தான் இன்பம் என்பது புலப்படும். துன்பத்திற்குப் பின் இன்பம் உறுதியாக உண்டு. நமக்கிடையே இப்போது இப்பிரிவு நேர்கிறது என்று எண்ணாதே. இதுவரை நாங்கள் நால்வரே உடன்பிறந்தவர் என்றிருந்தோம், உறவு என்பது எங்கள் நால்வரோடு நின்றுவிடவில்லை. இப்போது உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம். ' என்றான். | | |
| | III | **வள்ளலார் கந்தகோட்டத்து இறைவனிடம் வேண்டுவன:**<br>• அறம் செய்வோர் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் கந்தவேளே! குளிர்ந்த முகத்தோற்றத்தை உடைய தூய மாணிக்க மணியே! அம்மணிகளுள் அருள் நிறைந்த சைவமணியே!<br>• எனக்கு ஒரு நெறிப்பட்ட மனதுடன் உன்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர் தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்கவேண்டும்.<br>• பெருமை சான்ற நினது புகழைப் பேச வேண்டும்.<br>• பொய்மை பேசாதிருக்க வேண்டும்.<br>• சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்றுமாறு எனக்கு அருள வேண்டும்.<br>• மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்.<br>• துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்.<br>• என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்.<br>• மதியும் கருணையும் நிதியும் நோயற்ற வாழ்வும் உடையவனாக நான் இருக்க வேண்டும்.<br>• ஆறு முகங்களை உடைய தெய்வமாகிய மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருளவேண்டும் என இராமலிங்க அடிகளார் கந்தகோட்டத்து இறைவனிடம் வேண்டுகிறார். | | |
| | IV | **இல்வாழ்க்கையின் சிறப்பு** :<br><br>• அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால் அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.<br>• அறத்தின் இயல்பிலிருந்து வழுவாமல் இல்வாழ்க்கை வாழ்பவர் பெருமுயற்சி உடைய சிறப்புப் பொருந்தியவரைக் காட்டிலும் மேலானவராகக் கருதப்படுவார்.<br><br>• உலகத்தில் வாழவேண்டிய அருள்நெறியோடு நின்று வாழ்கின்றவர். வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவார். | | |

**குறிப்புகள்** :

- பிழையின்றி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.
- 3 மதிப்பெண்களுக்குக் குறைந்தது 2 மதிப்பெண்கள் வழங்கலாம்

| 10 | பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க: | | 3× 5 =15 |
|---|---|---|---|
| | I | **தொடரியல் போக்குகள்** :<br>• ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது.<br>• சொல்லுவோருடைய மொழித்திறன், கேட்போர்- வாசிப்போருடைய உளப்பாடாக மறித்தாக்கம் பெற வேண்டும்.<br>• பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்ப, தொடர்கள் நேர் நடந்தும் ஏறியிறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.<br>• உரைநடை வழக்கு, பேச்சுவழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் (அல்லது) பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப் பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகிறது. இது கவிதை மறுதலைத் தொடர் ஆகும். | | |
| | II | **இன்றைய சென்னை நகரம்**<br>• இன்று சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம்.<br>• சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகள் நகரின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • இன்று கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தி ஆகியவற்றில் சென்னை பெரும் பங்காற்றுகிறது.<br>• இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் சென்னை, மின்னணுப் பொருள்களை உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.<br>• ஒரு நகரம் உலகப் புகழ்பெறுவதற்கு, அது தொன்மைச் சிறப்புடையதாக இருக்க வேண்டும்; தொழில் வளம் மிகுதியாகப் பெற்றிருக்க வேண்டும்; சிறந்த குடிமக்களைக் கொண்டிருக்க வேண்டும்.<br>• துறைமுக வசதியுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி, வணிகம் தொடர்ந்து நடைபெற வேண்டும்.<br>• தொழில்நுட்ப வசதிகளுடன் மிளிர வேண்டும்.<br><br>[ **சென்னை குறித்த பொதுவான செய்திகள் எழுதி இருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்** ] | | |
| | III | **தமிழக நீர் நிலைகள்** :<br><br>• தமிழக நிலப்பரப்பில், விடுதலைக்கு முன்பு, ஏறத்தாழ ஐம்பதாயிரம் நீர் நிலைகள் இருந்தன. இன்றைக்கு அவை வெறும் இருபதாயிரமாகக் குறைந்து போயிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.<br>• சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களைச் சுற்றிமட்டும் ஏறத்தாழ ஐந்நூறு ஏரிகள். குளங்கள் காணாமல் போய் விட்டன.<br><br>• இருக்கின்ற நீர்நிலைகளில் பெரும்பாலானவை தூர்ந்து கிடக்கின்றன. இதனால் இலட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.<br>• நிலத்தடி நீர்மட்டமும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது.<br>• நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மணலின் பங்கு இன்றியமையாதது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • இன்று குறிப்பிட்ட அளவையும் கடந்து மணலை எடுத்துப் பயன்படுத்தியதன் விளைவாக நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து நீரோட்டத்தில் தடை ஏற்பட்டு ஏராளமான எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டுள்ளன.<br>• இந்நிலை தொடர்ந்தால் வேளாண்மைத் தொழில் கற்பனை செய்ய முடியாத அளவு இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.<br><br>[ **நீர்நிலைகள் குறித்த பொதுவான செய்திகள் எழுதி இருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்** ] | | |
| | **IV** | **தாய்வழிக் குடும்பம்**<br><br>• சங்ககாலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.<br>• தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது.<br>• பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை தாய்வழிக் குடும்பத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.<br><br>**சிறுவர் தாயே பேரிற் பெண்டே (புறம் 270)**<br>**செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம் 276)**<br>**வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம். 277)**<br>**முளரி மருங்கின் முதியோள் சிறுவன் (புறம். 278)**<br>**என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்(கலி.பாலை-8**<br>முதலான தொடர்களில் 'இவளது மகன்! என்றே கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகத்தின் நிலையை அறிய முடிகிறது.<br><br>• சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை இருந்துள்ளது.<br>• திருமணத்திற்குப்பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண் குழந்தைதளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது.<br>• தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.<br>• தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் கூறுகிறது.<br><br>**[பாடல் அடிகள் இல்லையெனில் மதிப்பெண்களைக் குறைக்க வேண்டாம் ]** | | |
| | V | **சென்னை நகர உருவாக்கம்**<br><br>• செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.<br>• கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைந்த குடியிருப்புகள் உள்ள பகுதி ' கருப்பர் நகரம்' என அழைக்கப்பட்டது.<br>• இந்த இரு பகுதிகளும் இணைந்த பகுதியே மதராசப்பட்டினம் எனப்பட்டது.<br>• கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்த காரணத்தால், இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர். அவர்களால் வண்ணாரப்பேட்டை [வண்ணத்துக்காரன்பேட்டை] சிந்தாதிரிப்பேட்டை [சின்னதறிப்பேட்டை] முதலான புதிய பகுதிகள் தோன்றின.<br>• ஏற்கெனவே இருந்த எழும்பூர், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவொற்றியூர் முதலிய கிராமங்களும் இணைக்கப்பட்டன. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும் தென் சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர். பின்பு அதுவே மெட்ராஸ் ஆகி இன்று சென்னையாக மாற்றம் பெற்றுள்ளது. | | |
| **குறிப்புகள்** : | | | | |
| • பிழையின்றி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | | | | |
| • 5 மதிப்பெண்களுக்குக் குறைந்தது 3 மதிப்பெண்கள் வழங்கலாம் | | | | |
| | | **பகுதி -ஈ ( துணைப்பாடம் - 12 மதிப்பெண்கள் )** | | |
| | | **SECTION – D ( NON - DETAIL - 12 MARKS )** | | |
| **11** | | **ஏதேனும் ஒன்று குறித்து துணைப்பாடக் கட்டுரை எழுதுக:** | | **1× 7 =7** |
| | | முன்னுரை | 1 | |
| | | துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை | 5 | |
| | | முடிவுரை | 1 | |
| | I | **உரிமைத்தாகம்** | | |
| | | முன்னுரை - முத்தையன், வெள்ளைச்சாமி உறவுமுறிவு - பங்காருசாமியிடம் நிலத்தை அடகு வைத்தல் - மனைவியின் மூலம் முத்தையன் அறிதல் - வெள்ளைச்சாமியிடம் விவரம் கேட்டறிதல் - பங்காருசாமியிடம் பணம் கொடுக்கச் செல்லல் - ஏமாற்று வேலை - வாக்குவாதம் - நிலத்தில் வேலை பார்த்தல் - பங்காருசாமி இருவரையும் நிலத்தில் காணுதல் - பங்காருசாமியை விரட்டியடித்தல் - முடிவுரை. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | II | **முதல்கல்** | | |
| | | முன்னுரை - வெள்ளப்பெருக்கு - வானிலை அறிவிப்பு - வளவனாற்றின் நிலை பற்றிய மருதனின் கவலை - காட்டாமணக்குச் செடிகளின் ஆக்கிரமிப்பு - மருதன் காணல் - மாரிமுத்து, பிரேம்குமார், மிராசு காளியப்பன் ஆகியோரிடம் ஆலோசனை கேட்டல் - அல்லியிடம் வருந்துதல் - தனியாளாக ஆற்றிலிறங்கி, செடிகளை அகற்றல் - ஊர்மக்கள் அனைவரும் வடிவாய்க்கால் நோக்கி நடக்கத் தொடங்குதல் - முடிவுரை. | | |
| | III | **தலைக்குளம்** | | |
| | | முன்னுரை - தலைக்குளம் - கிராமத்தின் வளமை - வீட்டின் அமைப்பு - வீட்டை விற்க எண்ணுதல் - நீதிபதியிடம் உரையாடல் - வீட்டைப் பார்த்தல் - முகவரி இழந்த நிலை - முடிவுரை. | | |
| **குறிப்புகள்** : | | | | |
| • பிழையற்ற துணைப்பாடக் கட்டுரைக்கு முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | | | | |
| • 7 மதிப்பெண்களுக்குக் குறைந்தது 5 மதிப்பெண்கள் வழங்கலாம் | | | | |
| **12** | | **கீழ்க்காணும் கதை மாந்தரில் ஒருவரின் பண்பு நலனை எழுதுக:** | | **1× 5 =5** |
| | | முன்னுரை | 1 | |
| | | பண்பு நலன் | 3 | |
| | | முடிவுரை | 1 | |
| **குறிப்புகள்** : | | | | |
| • பிழையின்றி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | | | | |
| • 5 மதிப்பெண்களுக்குக் குறைந்தது 3 மதிப்பெண்கள் வழங்கலாம் | | | | |
| • பத்தி வடிவில் இருந்தாலும் 4 மதிப்பெண்கள் வழங்கலாம். | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **பகுதி -உ ( படைப்புத்திறன் - 15 மதிப்பெண்கள் )** | | |
| | | **SECTION – E ( CREATIVE WRITING - 15 MARKS )** | | |
| **13** | | **பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக:** | | **1× 6 =6** |
| | | **உறவுமுறைக் கடிதம்** | | |
| | | இடம்,தேதி | 1 | |
| | | விளி | 1/2. | |
| | | நலம் விசாரிப்பு | 1/2. | |
| | | உள்ளடக்கம் | 3 | |
| | | முடிப்பு | 1/2. | |
| | | உறைமேல் முகவரி | 1/2. | |
| | | **(அல்லது)** | | |
| | | **அலுவலகக் கடிதம்** | | |
| | | அனுப்புநர் | 1/2. | |
| | | பெறுநர் | 1/2. | |
| | | விளி | 1/2. | |
| | | பொருள் | 1/2. | |
| | | உள்ளடக்கம் | 2 | |
| | | முடிப்பு | 1/2. | |
| | | இடம், தேதி | 1 | |
| | | உறைமேல் முகவரி | 1/2. | |
| 14 | | **நேர்காணல்** | | **1× 3 =3** |
| | | தொடக்கம் | 1/2. | |
| | | ஆளுமையை வெளிப்படுத்தும் வினாக்கள் | 2 | |
| | | முடிப்பு | 1/2. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | | **பின்வரும் தலைப்புகளில் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக:** | | **1× 6 =6** |
| | | முன்னுரை | 1 | |
| | | துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை | 3 ½ . | |
| | | மேற்கோள் | 1/2. | |
| | | முடிவுரை | 1 | |

**குறிப்புகள்** :

- பிழையின்றி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.
- 6 மதிப்பெண்களுக்குக் குறைந்தது 4 மதிப்பெண்கள் வழங்கலாம்
- பத்தி வடிவில் இருந்தாலும் 4 மதிப்பெண்கள் வழங்கலாம்.